பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 19 சனிக்கிழமை 02.03.2024 கதிர் 116

# ஜனாதிபதி தேர்தல் வரையில் கடன்மறுசீரமைப்பு நடக்காது

## சீனா, இந்தியா, ஜப்பான் இணங்கவில்லை என்கிறார் கம்பன்பில

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெளிநாட்டு கடன்களை ஆட்சியாளர்கள் மறுசீரமைக்கமாட்டார்கள்.

என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஹோமாகமவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர்கெஹலியரம்புக்வெலவை வியாழக்கிழமை அவரது நெருங்கிய சகாவான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சிறையில் சென்று சந்தித்தார். கெஹலிய சிறைக்குள் அடைக்கப்பட்ட பின்னர் அவரைச் சென்றுசந்தித்த-முதல்அரசியல்வாதி மகிந்ததான். என்ன இருந்தாலும் நண்பன் என்ற ரீதியில் சென்று அவர் சந்தித்திருப்பார் போலும். ஆனால் ஆளும் தரப்பிலிருந்து கெஹலியவுக்குஆதரவுகிடைப்பதாகத் தெரியவில்லை.

நீதிமன்றத்தால் விளக்கமறியல் விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டதுமேவழக்கம்போலஉடல்நலக் குறைவுஏற்பட்டதாகக்கூறிகெஹலிய சிறை மருத்துவமனையில் ☞ 2

## தேயிலை உரம் ரூபாய் 2000க்கு

அரசுக்குச் சொந்தமான இரண்டு உர தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர் தரத்திலான தேயிலை உரம் 2 ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்படும் என விவசாய மற்றும் பெருந்தோட்டகைத்தொழில்அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தநாட்களில்நாடுமுழுவதும் ☞ 8

# வாக்குகள் பற்றிய அச்சமின்றி முடிவெடுக்க வேண்டிய நேரம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

வாக்குகளை இழந்துவிடுவோமோ என்ற அச்சமின்றிமுடிவெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. அரசியல் பேரணிகளுக்கும், பேருந்தில் மக்களை அழைத்து வருவதற்கும் பணம் செலவழிக்க நாங்கள்விரும்பவில்லை. நாம் விரும்புவது நம் நாட்டைவீழ்ச்சியடைந்த இடத்திலிருந்து முன்னேற்றுவதுதான் என்று அமைச்சர் மனுஷ நாணயக்காரதெரிவித்தார்.

கண்டி போகம்பர சிறச்சாலைமைதானத்தில் நேற்று நடைபெற்ற ஜெயகமு ஸ்ரீ லங்கா திட்டத்தின் நான்காவது கட்டத்தின் முதலாவது நாள் நிகழ்வுகளை ஆரம்பித்துவைத்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர்தொடர்ந்து தெரிவித்ததாவது:

இலங்கையானது விருந்தோம்பல் மற்றும் நன்கொடைகளைவழங்குவாத்தின் மூலம் அறியப்படுகிறது. நாம் எப்போதும் ஒருவருக்கொருவர்உதவிசெய்யும் தேசம். ராபர்ட் நாக்ஸின் உதாரணம்போல் கைதிகளை நல்ல உபசரிப்புடன் நடத்துகி ☞ 2

### சம்பள அதிகரிப்பு விவகாரம்

# மத்திய வங்கி ஆளுநரை அழைத்து விளக்கம் கேட்பதற்குத் தீர்மானம்

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பளம் அதிகரிப்பு தொடர்பிலான காரணிகளை எடுத்துரைக்க மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதிகாரிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்துக்கு அழைக்கப்படவுள்ளனர்.

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழு கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று கூடியது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமைமுதல் வியாழக்கிழமை வரை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறவுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமை ☞ 2

# ‘கண்ணீரைத் துடைப்போம்’ திட்டத்துக்கு 50,000 டொலர்

## தாய்லாந்து பிக்குகள் உதவி

கொழும்புகங்காராம விகாராதிபதி கலாநிதி வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரர்மற்றும்தாய்லாந்து பௌத்த குழுவினர் ஒன்றிணைந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து 50,000 அமெரிக்க டொலர்களை அன்பளிப்புச் செய்தனர்.

இந்த அன்பளிப்புத் தொகையை மிகவும் வறியமக்களுக்குஉதவுவதற்காக ஜனாதிபதி நிதியம்முன்னெடுத்துள்ள ’கண்ணீரைத் துடைப்போம்’ வேலைத் திட்டத்திற்கு பயன்படுத்துமாறு ஜனாதிபதி, தனது செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்தார்.

இந்தக் குழு இலங்கையின் நலன்புரிச் செயற்பாடுகளுக்காக மூன்றாவது முறையாக இவ்வாறான அன்பளிப்பை வழங்கியுள்ளதோடு, 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் மேற்படிக் ☞ 8

# பொருளாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கவே செங்கடல் பாதுகாப்பில் இலங்கை கடற்படை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதாரம்பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவே செங்கடலை நாட்டின்கடற்படையைக் கொண்டு பாதுகாக்கத் தீர்மானித்தோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

1967 இஸ்ரேல்-அரபு போரின்போது சுயஸ் கால்வாய் மூடப்பட்டதன் காரணமாக 10 வருடங்களாக கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டிருந்ததை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, இந்நாட்டு துறைமுகங்களின் பெறுமதியை பேணுவதற்காக சுயஸ் கால்வாய் மற்றும் செங்கடலின்பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன்அவசியத்தையும் வலியுறுத்தினார்.

திருகோணமலை கடற்படை முகாமில் நேற்று இடம்பெற்ற இலங்கை கடற்படையின் விசேட கப்பல் படையணிக்கு ஜனாதிபதி வர்ணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ,

கடற்படையின்சிறப்பு கப்பல் படையணிக்கு இன்று மிகவும் முக்கியமான நாள். இப்படையணிக்கு ☞ 2

# 2 நாட்களில் 4 விபத்துக்கள் 4 பேர் பரிதாபமாகச் சாவு

கடந்த இரண்டு நாட்களில் இடம்பெற்ற 4 விபத்துக்களில் 2 பாடசாலை மாணவர்கள் உட்பட நால்வர் பரிதாபகரமா உயிரிழந்துள்ளனர்.


பாடசாலை சேவையில் ஈடுபடும் சிற்றூர்தி மோதியதில் 4 வயது சிறுவன்வியாழக்கிழமை உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீடொன்றின் முற்றத்தில்விளையாடிக்கொண்டிருந்தசிறுவன், திடீரென வீதியை நோக்கி ஓடிய வேளை, அவ்வழியால் வந்த பாடசாலைச் சேவைச் சிற்றூர்தி அவனை மோதியது. படுகாயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எகொண்டுசெல்லப்பட்ட சிறுவன்உயிரிழந்தான்.

உயிரிழந்த ☞ 2

# சாந்தனின் பூதவுடல் நேற்று இலங்கையை வந்தடைந்தது

## உடற்கூறாய்வுக்குப் பின்பே விடுவிக்கப்படும்



ராஜீவ்காந்திகொலை வழக்கில் தண்டனை முடிந்து விடுவிக்கப்பட்ட சாந்தனின் பூதவுடல் நேற்று இலங்கையை வந்தடைந்தது.

சென்னையில் இருந்து விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த பூதவுடல் தாங்கிய பேழையைப் பெறுவதற்கு நீண்ட நேரம் சென்றது. உரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டதன்பின்னர் பூதவுடலைஉறவினர்கள் பெற்றுக்கொண்டனர்.

எனினும் உடற்கூறாய்வுகளுக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையில் பூதவுடல் ஒப்படைக்கப்பட்டது.மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் பூதவுடல் யாழ்ப்பாணத் திற்கு எடுத்து வரப்படவுள்ளது. நாளை ஞாயிற் றுக்கிழமைசாந்தனின்இறுதிக் கிரியைகள் இடம்பெறும் என்றுஅறிவிக்கப்பட்டிருக்கின்றது.

உடற்கூறாய்வுகள் முடித்து பூதவுடலைக் கையளிப்பதில் தாமதங்கள்ஏற்பட்டால்சாந்தனின் இறுதிக் கிரியைகள் பின்தள்ளப்படலாம் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

# பிராந்திய உறுதிப்பாடு, பாதுகாப்பு மிக முக்கியம் என்கிறார் ரணில்

பிராந்தியஉறுதிப்பாடு மற்றும் பாதுகாப்பு மிக முக்கியமானது. அதேபோல் உலக அமைதியும் முக்கியமானது. எனவே, இவ்வாறான விடயங்களுக்குளமதுஒத்துழைப்பு அவசியப்படும்போதுஒரு நாடு என்ற வகையில் முப்படையினரின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றுஜனாதிபதிரணில் விக்ரமசிங்க ☞ 8

# 3 யாழ்ப்பாண தீவுகளுக்கு மின்சாரம் வழங்க ஒப்பந்தம்

## இந்திய நிறுவனங்களுடன் கைச்சாத்து

யாழ்ப்பாணத்தில் உள்ளமூன்றுதீவுகளில் கலப்பினபுதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்புகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியக்குடியரசின் 10.995 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மானியத்தின் கீழ் நெடுந்தீவு,அனலைத்தீவு மற்றும் நயினாதீவு தீவுஆகியவற்றில் ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# கெஹலியவை சிறையில் சென்று சந்தித்தார் மகிந்த

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர்கெஹலியரம்புக்வெல்லவை முன்னாள்ஜனாதிபதிமகிந்தராஜபக்ச வியாழக்கிழமைசிறையில்சென்று பார்வையிட்டார்.

இச்சந்திப்பு, 30நிமிடங்களுக்கு மேல் நடைபெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தான் கைது செய்யப்பட்டதற்குஎதிராக, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உயர்நீதிமன்றத்தில் வியாழக்கிழமை அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் தாம்கைதுசெய்யப்பட்டு,நியாயமான காரணமின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டதன் மூலம் தனது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அடிப்படை மனித உரிமைகளை மீறியமைக்காக பிரதிவாதிகளிடமிருந்து 100 மில்லியன் ரூபாநட்டஈடு வழங்கப்படவேண்டுமெனவும்மனுதாரர்கோரியுள்ளார்.

தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பில் மனுதாரர் கெஹலிய ரம்புக்வெல்ல, கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வாக்குமூலம் வழங்குவதற்காககுற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில்ஆஜராகியபின்னர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## இனி இது .....

சேர்ந்துவிட்டார். அதுமட்டுமல்ல அடுத்த தவணைக்கு அவர் நீதிமன்றத்திற்கும் வரவில்லை. வரமுடியாத அளவிற்கு அவரது உடல்நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவரை கொழும்புதேசியவைத்தியசாலைக்கு மாற்ற வேண்டும் என்றும் சிறைச்சாலை மருத்து அதிகாரி அறிக்கை வழங்கியிருந்தார்.

அந்தஅறிக்கைசரியானதுதானா என்று ஆராய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் 8 மருத்துவ நிபுணர்கள் கொண்ட குழுவை நியமித்தது. அந்தக் குழுவினர் சிறை மருத்துவரின் அறிக்கை, கெஹலியவின் மருத்துவப் பரிசோதனை அறிக்கைகள் என்பவற்றை கூர்ந்து ஆராய்ந்து பார்த்த பின்னர், சிறைமருத்துவமனையில் உள்ளகெஹலியவுக்குநீதிமன்றுக்கு வரமுடியாத அளவிற்கு எந்தவொரு நோய் நொடியும் இல்லை என்று அறிவித்துவிட்டார்கள். அவரை கொழும்புதேசியவைத்தியசாலைக்கு மாற்ற வேண்டிய தேவை இல்லை என்றும் தெரிவித்து விட்டார்கள்.

மருத்துவ நிபுணர்கள் குழுவின் இந்த அறிக்கையை சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. அதுமட்டுமல்ல, கெஹலிய நீதிமன்றத்திற்கு வரமுடியாத அளவிற்குச் சுகவீனமுற்றுள்ளார் என்று அறிக்கை வழங்கிய சிறை மருத்துவருக்குஎதிராகநடவடிக்கை எடுக்கும்படியும் நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களம் கோரிக்கையும் வைத்துள்ளது.

அதுமட்டுமல்லாமல்கெஹலிய கைதுசெய்யப்பட்டவழக்கில்குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சிஐடி) மற்றொருவரையும் கைது செய்துள்ளனர். சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத்நாயக்கவே கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளிக்கிழமை மாலை அவர் கைதுசெய்யப்பட்டார். வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின்அலுவலகத்திற்கு அழைக்கப்படிருந்த அவரிடம் வாக்குமூலம் பெற்றதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

கெஹலிய விடயத்தில் ஆளும் தரப்பின் மேலிடங்களில் இருந்து எந்த ஆதரவும் இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. எனினும் மகிந்த சிறைக்கு வந்து சென்றிருக்கும் நிலையில் இவை எல்லாம் இனி மாறுமோ என்னவோ....

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்றிட்டம் வெற்றி பெற்றுள்ளதாக அரசு குறிப்பிடுகிறது. ஆனால் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரம் இன்றுவரை இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.

கடன் மறுசீரமைப்புக்கு இலங்கையின் பிரதான கடன் வழங்குநர்களான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கடன் மறுசீரமைப்புக்கு சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

வெளிநாட்டு கடன் மறுசீரமைக்கப்பட்டால் வருடாந்தம் 3 பில்லியன் டொலர் அரச முறை கடன்கள் திருப்பி செலுத்த வேண்டும். வெளிநாட்டுகையிருப்பு 4 பில்லியனாக காணப்படுகின்ற நிலையில் வெளிநாட்டு கடன்களை திருப்பிசெலுத்துவது சாத்தியமற்றது.

வெளிநாட்டு கடன்களை செலுத்தினால் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதில் பாதிப்பு ஏற்படும்.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளநிலையில்எதிர்வரும் செப்டெம்பர்மாதம்வரைவெளிநாட்டு கடன்களை ஆட்சியாளர்கள் மறுசீரமைக்கமாட்டார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் வரி கொள்கையை மாத்திரம் முழுமையாக அமுல்படுத்தும் ஆளும்தரப்புதேசியஉற்பத்திகளை மேம்படுத்த அவதானம் செலுத்தவில்லை.

கடன்பெறுதல், மிகுதியாகியுள்ள வளங்களை விற்பனை செய்தல் மாத்திரமே ஜனாதிபதியின் பொருளாதார கொள்கையாகக் காணப்படுகிறது என்றார்.

## 3 யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2025 மார்ச் மாதத்திற்குள் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வழங்குவதற்காக இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

530கிலோவோல்ட் காற்றாலை மின்சாரம், 1700 கிலோவோல்ட் சூரிய சக்தி, 2400 கிலோவோல்ட் மின்கல சக்தி மற்றும் டீசல் மூலம் 2500கிலோவோல்ட்திறன்கொண்ட திட்டம் மூலம் 3 தீவுகளுக்கும் 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும்.

இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபை மற்றும் யு சோலார் கிளீன் எனர்ஜி சொலூசன் நிறுவனம் (U SOLAR, CLEAN Energy Solutions pvt. Ltd). ஆகிய தரப்புக்களுக்கு இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா மற்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

மூன்று தீவுகளின் மக்களின் எரிசக்தி தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இந்ததிட்டம், இந்திய அரசின் மானிய உதவிமூலம் செயல்படுத்தப்படுகிறது. ஹைபிரிட் திட்டம் சூரிய மற்றும் காற்று உட்படபல்வேறு வகையான ஆற்றலை ஒருங்கிணைத்து, திறன்களை மேம்படுத்துகிறது.

## வாக்குகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோம். நன்கொடைகள் வழங்கும் வரலாற்றைக்கொண்ட ஒருதேசமாக இருந்தாலும், வரிசெலுத்துவதுநாட்டில் குறிப்பிடத்தக்க பிரச்சினையாக மாறியுள்ளது. வரிகள் உண்மையில் எதற்காகப்பயன்படுத்தப்படுகின்றன? இலவசசுகாதாரம், தேசியபாதுகாப்பு, இலவசக் கல்வி ஆகியவற்றுக்கான நிதியைப்பெறஒரேவழிவரிகள்தான்.

இன்று சிலர் வரி விதிப்பதை எதிர்க்கின்றனர். நாட்டின் பொருளாதார சூழ்நிலை காரணமாக வரிகளை அதிகரிக்கவேண்டியிருந்தது. எனவே, தாங்கள் ஆட்சிக்குவந்தால் வரிகளைக் குறைப்பதாகயாராவது கூறினால் வரி விதிக்காமல் அரசசேவைகளை எப்படி வழங்கத் திட்டமிடுகிறார்கள் என்று அவர்களிடம் கேட்கவிரும்புகிறேன் . அந்த நேரத்தில் வீடுகளில் உள்ள தங்கத்தை விற்பனை செய்வதன் மூலம்அவர்கள்இந்தசேவைகளுக்கு நிதியளிப்பார்களா?

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் போது, வரிகளை அதிகரிப்பதுஎமக்கு மிகவும் பாதகமான விடயமாகும். ஏனென்றால்வரியை உயர்த்தும்போது, அரசு அதிகாரிகள் உட்பட வரி கட்ட வேண்டியமக்கள் அனைவரும்நம் மீது கொந்தளிக்கின்றனர்.

எவ்வாறாயினும், இந்த நாடு மீண்டும் துண்டாடப்படுவதை தடுப்பதற்காகவே இந்தத் தீர்மானங்களை எடுத்தோம். இந்த தீர்மானங்களின் அரசியல் பாதகங்கள் எதுவாக இருந்தாலும், பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும், நாட்டில் இனி பொருளாதார வீழ்ச்சி ஏற்படாதவாறு உறுதி செய்வதற்கும் ஜனாதிபதி இக்கடினமான தீர்மானத்தை எடுத்துள்ளார்.

கடந்த மாதம் அரசின் வரி வருமானம் எதிர்பார்த்ததை விட அதிகமாகியிருந்தது. இதன்மூலம்300 பில்லியன்ரூபாஉபரியாகஉள்ளது. மத்தியவங்கியால்பணத்தை அச்சிட முடியாத பட்சத்தில், இந்த உபரியை கையிருப்புநிதியாகவைத்திருக்குமாறு ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார்.

300பில்லியன்ரூபா உபரியான பணத்தை வரிகளை குறைப்பதன் மூலமோ அல்லது பணத்தை மக்களுக்குபகிர்ந்தளிப்பதன்மூலமோ ஜனாதிபதி அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்தியிருக்கலாம். இருப்பினும், அவர்நாட்டின்நலனுக்குமுன்னுரிமை அளித்து பணத்தை கையிருப்பில் வைத்திருப்பதைத் தேர்ந்தெடுத்தார். வரவிருக்கும்மாதங்களில்இதேபோன்ற உபரிகளைஎதிர்பார்க்கிறோம்மற்றும் 100-150 பில்லியன் கையிருப்பை பராமரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து, இலங்கைத்தலைவர்கள்தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குதொடர்ச்சியாகப் பாடுபட்டுவருகின்றனர். இருப்பினும், இத்தலைவர்களைவிமர்சிப்பவர்கள் முன்புஅவர்களின்ஆதரவாளர்களாக இருந்தனர்.

வங்குரோத்தைஇருந்துவிடுவோமோ என்ற அச்சமின்றி முடிவெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. அரசியல்பேரணிகளுக்கும்,பேருந்தில் மக்களை அழைத்து வருவதற்கும் பணம் செலவழிக்க நாங்கள் விரும்பவில்லை.நாம்விரும்புவதும் நாட்டைவீழ்ச்சியடைந்தநிலையிலிருந்து முன்னேற்றுவதுதான் . நாம் அனைவரும்மாற்றத்தைஎம்மிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்அப்போதுதான் நாம் வளர்ந்த நாடாக மாற முடியும்.

நாட்டின் எதிர்காலத்திற்காக திறமையானசந்ததியைஉருவாக்கும் நோக்கில் பத்தாயிரம் இளைஞர் யுவதிகளுக்குதொழில்பயிற்சிகளை வழங்கஜனாதிபதிநிதியத்தில்இருந்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும், 'கருசருதிட்டத்தின்கீழ், இலங்கையில் முறைசாரா துறையில் பணிபுரியும் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு என்விகியூ (ஹரிகு) சான்றிதழ்கள் வழங்கப்படும், இது நாட்டில் உள்ள முறைசாரா துறை ஊழியர்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது .

அடுத்த தலைமுறையினர் நவீன உலகத்திற்கு நன்கு தயாராக இருப்பதைஉறுதிசெய்யும்வகையில், ஸ்மார்ட் வகுப்பறைகளை நிறுவ ஸ்மார்ட் (றீனியூவீ) போர்டுகளை அறிமுகப்படுத்துகிறோம்.

நமதுநாடுமுதன்மையாகமனித வளத்தைநம்பியிருப்பதால்நமதுமனித மூலதனத்தைமேம்படுத்துவதற்கும் நாங்கள்அர்ப்பணிப்புடன்இருக்கிறோம் என அமைச்சர் கூறினார்

## பொருளாதாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டன. கடற்படையின் விசேட கப்பல் படையணி ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்கள் கடந்துவிட்டன. இந்த படை 1993 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இராணுவத்தில் இரண்டு சிறப்பு சேவைப் பிரிவுகள் உள்ளதால், கடற்படையிலும் இதுபோன்ற படையணிகளை ஆரம்பிக்கத் தீர்மானித்திருந்தோம். கடற்படைத் தளபதிகள் தேசிய பாதுகாப்பு சபையில் நீண்ட காலமாக இது குறித்து கலந்தாலோசித்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத அமைப்புக்கு எதிரான போரில் கடற்படையின் தந்திரோபாய முயற்சிகளில் ஒன்றாக இந்தப் படையணியைக் கூறலாம். எனவே, இந்தப்படையணிஆற்றிய சேவையை நான் விவரமாக நினைவுகூரத் தேவையில்லை. இருப்பினும்அவர்களின்சேவைக்கு நன்றி கூறுகிறேன்.

அத்தோடு நின்றுவிடாமல் குறித்த படையணி இலங்கை கடற்படையின் முக்கிய பிரிவாக கௌரவிப்புக்கும் வரவேற்புக்கும் பாத்திரமாகியுள்ளமை சிறப்பம்சமாகும்.

எனவே,ஜனாதிபதிவர்ணத்தைப் பெற்ற பின்னர் மேலும் வலுவான முறையில்பணிகளைமுன்னெடுத்து இந்தப்படையணியின்நற்பெயரைப் பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், இறுதிப் போரின் போது இலங்கை கடற்படையினர் நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றியது. உயிர்த்தியாகம் செய்தவர்கள் மற்றும் இழக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான குறிப்புக்கள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. அதேபோல் வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கைகடல்பிராந்தியத்தினதும், இந்து சமுத்திரத்தினதும் பாதுகாப்பிற்காககடற்படைஅர்பணித்துள்ளது. அது குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கையையும் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

இந்து சமுத்திரத்திற்குள் நமது பொருளாதாரத் திட்டங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்த ஒருபோதும் இடமளியோம்.

இதனாலேயே செங்கடலின் பாதுகாப்பிற்காகநமதுகடற்படையை ஈடுபடுத்த தீர்மானித்தோம். 1967 இஸ்ரேல் - அரபு போரின் போது சுயஸ் கால்வாய் மூடப்பட்டதால் கப்பல்போக்குவரத்துபாதிக்கப்பட்டது. அதனால் 10 வருடங்களாக கொழும்புதுறைமுகத்தின் பணிகள் நிறுத்தப்பட்டிருந்ததை நாம் அறிவோம்.

அதனால் இந்து சமுத்திரம், சுயஸ் கால்வாய் , செங்கடலின் பாதுகாப்பிற்குமான ஒத்துழைப்புக்களை வழங்கி, நமது துறைமுகங்களின் பொருளாதார மதிப்பைபாதுகாக்கவேண்டியதும் அவசியமாகும். மேலும், எதிர்காலத்தில் நமது கடற்படை இந்த பணியில் வெற்றிகரமாக செயற்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

இன்று இந்த நிகழ்வு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் நடைபெறுகிறது. திருகோணமலை துறைமுகமானது இலங்கையில் மாத்திரமன்றி உலகிலேயேபிரதான துறைமுகமாக கருதப்படுகிறது. அனுராதபுரம் - பொலன்னறுவை காலங்களில் இத்துறைமுகம் முக்கியத்துவம் மிக்கதாக கருதப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது ஆசிய பிராந்தியத்தில் ஆங்கிலேயரின் வெற்றிக்கு இந்த துறைமுகமும் வழிவகுத்தது. எமது நாட்டிற்குச் சொந்தமான இந்தத்துறைமுகத்தைப்பாதுகாக்க வேண்டும். இதன்போது நாம் மத்தியஸ்தமாக செயற்பட வேண்டியதும் அவசியமாகும். இன்று முப்படைகளின்தளபதிஎன்ற வகையில்கடற்படைசிறப்புகப்பல் படையணியைக் கண்காணிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதற்காக கடற்படையினருக்கும் அவர்கள் நாட்டிற்குஆற்றும்சேவைக்காகவும் நன்றி தெரிவிக்கிறேன் என்றார்.

## மத்திய வங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் அவர்களின் தரப்பு நிலைப்பாட்டை கோருவதற்கு மத்தியவங்கியின்ஆளுநர்உட்பட உயர் அதிகாரிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில்இடம்பெறவுள்ள கட்சித் தலைவர் கூட்டத்துக்கு அழைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பளம் 70 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்குஆளும் மற்றும்எதிர்தரப்பின்உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, மத்திய வங்கியின் ஆளுநரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினர்.

புதிய மத்திய வங்கி சட்டத்துக்கு அமைய மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளதால் சம்பள விவகாரத்தில் தலையிட முடியாது என நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இலங்கைமத்தியவங்கியின்நிர்வாக சபையின் அங்கீகாரத்துடனும் தொழிற்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் தமது ஊழியர்களுக்கானசம்பளஅதிகரிப்பு வழங்கப்பட்டதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

சம்பள அதிகரிப்பு தொடர்பில் குற்றச்சாட்டுக்களைமுன்வைத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்களிக்கமத்தியவங்கிதயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை இதுகுறித்து விளக்களிப்பதற்காக எழுத்து மூல அவகாசம் கோருமாறு நிர்வாக சபையினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக நிதியமைச்சராக கடமையாற்றும் ஜனாதிபதிக்கு கடந்த மாதம்22ஆம் திகதி மத்திய வங்கி ஆளுநர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இவ்வாறான பின்னணியின் தான் மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதிகாரிகள் கட்சித் தலைவர் கூட்டத்துக்கு முன்னிலையாகவுள்ளனர்.

## 2 நாட்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவன்பெரியநீலாவணைவிஷ்ணு வித்தியாலய வீதியை சேர்ந்த 4 வயதுடைய அருணா ஹர்ஷான். சிறுவனின் சகோதரியை ஏற்ற வந்த சிற்றூர்தியே சிறுவனை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது..

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த மற்றொரு விபத்திலும் பாடசாலை மாணவன் உயிரிழந்தான். யாழ். மாவட்டம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை ஐயா கடை சந்திப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

சாவகச்சேரிஇந்துக்கல்லூரியின் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவனே இந்த விபத்தில் உயிரிழந்தான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து, பாடசாலையில் விளையாட்டுப் பயிற்சியை முடித்து விட்டு துவிச்சக்கரவண்டியில் வீடு திரும்பிய மாணவனை மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது. படுகாயமடைந்த மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டான். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குமாற்றப்பட்டான். அங்கு அவன் உயிரிழந்தான்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த 18 வயதான சிவநாவலன் பரணிதரன் என்ற மாணவனே உயிரிழந்துள்ளான். விபத்துடன் தொடர்புடைய இ.போ.ச பேருந்து சாரதி சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


எல்லே பகுதியில் நடந்த மற்றொரு விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். தொடருந்து மோதி 23 வயதுடைய அந்த இளைஞர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


வியாழக்கிழமை இரவு எல்லே தொடருந்துநிலையத்திற்குஅருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பதுளையில் இருந்து கொழும்பு

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# வாழ்நாள் சாதனையாளர் விருதுபெறும் மூத்த எழுத்தாளர் வி.ரி.இளங்கோவன்









இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த படைப்பாளிகளைக் கௌரவித்து ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த பல வருடங்களாக 'இரா. உதயணன் இலக்கிய விருதுகளை' வழங்கி-வருகின்றனர்.

கொரோனாப் பரவல் காரணமாக 2020, 2021, 2022 ஆண்டுகளுக்குரிய விருது வழங்கல் அறிவிக்கப்படாமலிருந்தது. தற்போது அந்த ஆண்டுகளுக்குரிய விருதுகள் யாவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டுக்குரிய 'வாழ்நாள் சாதனையாளர் விருது'க்கு மூத்த எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான 'வாழ்நாள் சாதனையாளர் விருது' மூத்த எழுத்தாளர் மலரன்னை அவர்களுக்கும் 2022 ஆம் ஆண்டுக்கான விருது மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரனுக்கும் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் விழா குறித்த விவரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

மூத்த எழுத்தாளர் இளங்கோவன் சிறுகதை, கட்டுரை, கவிதை, மருத்துவம் ஆகிய துறைகளில் 21 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் 14 நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

கல்லூரிக் காலம் முதல் சுமார் 36 வருடங்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். வடக்குக் கிழக்கு மாகாண சபையில் தகவல் - வெளியீட்டுத் திணைக்களம், திட்டமிடல் அமைச்சு - ஆளணிப் பயிற்சித் திணைக்களம் ஆகியவற்றில் பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலங்கைஇ இந்தியாஇ கனடாஇ ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற

இலக்கியக் கருத்தரங்குகள் - மாநாடுகள் பலவற்றில் இவர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியுள்ளார். இவரது சிறுகதைத் தொகுதியின் ஹிந்தி மொழிபெயர்ப்பு புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (2012) சிறப்பாக வெளியிடப்பட்டு பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தொகுதியின் ஆங்கில மொழிபெயர்ப்பு சென்னையில் (2014) வெளியிடப்பட்டது.

எழுத்தாளர், பேச்சாளர், கவிஞர், விமர்சகர், ஊடகவியலாளர், நடிகர் எனப் பல்துறை ஆளுமைமிக்க இவர் 'இளந்தலைமுறைப் பல்கலை வேந்தன்' என அன்று பராட்டுப்பெற்றார். இலக்கிய சமூகப் பணிகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

ஐ. நா. தொண்டராக பிலிப்பைன்ஸ் நாட்டில் (1983 - 1984) மூலிகை மருத்துவ - சமூக அபிவிருத்திப் பணியாற்றிஇ மேற்கு மின்டனாவோ மாநில சுயாட்சி அரசின் 'முதல்வர் விருது' உட்பட பல அமைச்சுகளின் விருதுகளையும் பெற்றவர்.

பிலிப்பைன்ஸ் சம்போங்கா நகரிலிருந்து வெளியாகும் முன்னணி நாளேடு 'மோர்ணிங் ரைம்ஸ்' இளங்கோவனின் சமூக அபிவிருத்தி - மூலிகை மருத்துவப் பணிகளைப் பாராட்டி ஆசிரியத் தலையங்கம் (1984) எழுதிக் கௌரவித்தது.

பிரான்ஸ் - துலூஸ் நகரில் 'இயற்கையும் உடல்நலமும்' என்ற பொருளில் நடைபெற்ற கண்காட்சி - கருத்தரங்கில் (1996) இளங்கோவன் சிறப்புரையாற்றினார். இதனை அறிந்த பிரான்ஸில் வெளியாகும் முன்னணி நாளேடுகளில் ஒன்று இளங்கோவனைப் பேட்டி கண்டு (1996) 'இன்றைய பிரமுகர்' என எழுதிக் கௌரவித்தது.

இலக்கிய - சமூகப் பணிகளுக்காக இளங்கோவன் பெற்ற விருதுகள் - பரிசுகளில் குறிப்பிடத்தக்க சில... ..

இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்தியஇ சிறுகதைப் போட்டியில் சிறப்பிடம் - 1978 இலங்கைக் கலையகம் - பிரான்ஸ் வழங்கிய கலை இலக்கிய - சமூகப் பணிகளுக்கான விருது - தங்கப்பதக்கம் -1992 இலங்கை இலக்கியப் பேரவை - இலக்கிய வட்டம் - 'இளங்கோவன் கதைகள்' சிறந்த சிறுகதைத் தொகுதிக்கான விருது - 2006

பிரான்ஸ் 'ஆர். ரி. எம். பிறதர்ஸ்' - 22 ஆவது கலைத்தென்றல் விழா - கலை இலக்கியப் பணிக்கான விருது - தங்கப் பதக்கம் - 2014

தமிழ்நாடு சின்னப்பாரதி இலக்கிய அறக்கட்டளை விருது - 'இப்படியுமா' சிறுகதைத் தொகுதிக்கானது - 2014

இலங்கை அரசின் கலாபூஷணம் விருது - 2014 இலங்கையில் அன்று 'மக்கள் எழுத்தாளர்' கே. டானியல் தலைவராக விளங்கிய மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் செயலாளராகப் பணியாற்றிய இளங்கோவன், தற்போது 'பாரிஸ் முன்னோடிகள் இலக்கிய வட்டத்தின்' தலைவராகப் பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கோழி இறைச்சியின் எலும்புக்குள் சூட்சுமமாக கொண்டு செல்லப்பட் ஹெரோயின் சிக்கியது

## சிறையிலுள்ள கணவருக்கு உணவு எடுத்துச் சென்ற பெண் கைது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுத்துறை சிறையிலுள்ள தனது கணவருக்கு கோழி இறைச்சியின் எலும்புக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து போதைப்பொருளை கொண்டு சென்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயாகல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் தனது 6 வயது மகளுடன் களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவருக்கு எடுத்துச் சென்ற கோழி இறைச்சி உணவுப் பார்சலில் இருந்த கோழியின் எலும்புக்குள் ஹெரோயின் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பெண்ணிடமிருந்து 550 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பெண் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொணடு வருகின்றனர்.(05)

# வவுனியா – மகாறம்பைக்குளம் வீதி சீரமைப்புத் தொடக்கம்



வவுனியா - மகாறம்பைக்குளம், காளி கோவில் வீதி புனரமைக்கும் பணி வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இவ்வாண்டிற்கான 1500 கிலோ மீற்றர் வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ் குறித்த வீதி காபெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

அந்தவகையில் 1180 மீற்றர் நீளமுள்ள குறித்த வீதியின் புனரமைப்பிற்காக 27 மில்லியன் ஷரூபா நிதி ஒதுக்கப்பட்டு, அதன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

அவருடன் அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(05-100)

# அக்கறைப்பற்று இராமகிருஷ்ணாவுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் திருக்கோவில் கல்வி வலயத்தில் உள்ள அக்கறைப்பற்று ஸ்ரீஇராமகிருஷ்ண கல்லூரி (தேசியப் பாடசாலை) யில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் க.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

கல்விக்கு வறுமை தடையாக இருக்கக் கூடாது என்றும் 'ஏழ்மையை ஒழிப்போம் கல்வியை விதைப்போம்' எனும் தொனிப்பொருளில் இணைந்த கரங்கள் அமைப்பு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை பல பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் சி.மதியழகன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ்.பி. அகிலன், பழைய மாணவர் சங்க உறுப்பினர் வி. சுகிர்தகுமார், எல். லக்மிகாந், பாடசாலை ஆசிரியர்களான செவ்வேல் குமரன், சுதர்சன், கின்ஸ்லி, சத்தியராஜ், அற்புதநாதன், திருமதி எல். திருச்செல்வம், திருமதி எம். ஜீவிதா, பாடசாலை உத்தியோகத்தர்களான எம்.எம்.பத்திமா ரோசானா, திருமதி கே. கிரியாழினி, இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான லோ. கஜஷரூபன், சி.காந்தன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வெப்ப காலத்தை சமாளித்தல்

வழக்கமாக பங்குனி, சித்திரை மாதங்களிலேயே இலங்கை அதிக வெப்பத்தை எதிர்கொள்ளும். எனினும் இந்த ஆண்டு மாசி மாதத்திலேயே கடும் வெப்பத்தை எதிர்கொள்ளத் தொடங்கி, பங்குனித் தொடக்கத்திலேயே அது உச்சத்தைத் தொடத் தொடங்கியுள்ளது. மாசி மாதத்தில் வழக்கமாகக் காணப்படும் பனிப் பொழிவு இந்தமுறை அடியோடு இல்லை என்னும் அளவிற்கு வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ளது.

வெப்பநிலைஅதிகரித்துவருவதால்,ஒவ்வொருவரும் தண்ணீர் அருந்தும் அளவுகள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்று சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்துகின்றனர். நீரிழப்பு நமது ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும், குறிப்பாகநமதுசிறுநீரகத்திற்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தண்ணீர் அருந்தும் அளவு குறித்து கவனம் செலுத்துவது கட்டாயமானது.

நமது சிறுநீரகங்கள் கழிவுப்பொருட்களை வடிகட்டுவதிலும், நம் உடலில் திரவ சமநிலையை பராமரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் நீரிழப்புக்கு ஆளாகும்போது, நமது சிறுநீரகங்கள் இந்த செயல்பாடுகளை திறம்பட செய்யப் போராடுகின்றன. சிறுநீரக ஆரோக்கியத்திற்கு நீரேற்றம் ஏன் அவசியம்.

போதுமான அளவு திரவ உட்கொள்ளலே சிறுநீரகங்கள் சோடியம், யூரியா மற்றும் பிற கழிவுப்பொருட்களை வெளியேற்ற உதவுகிறது. நாள்பட்டநீரிழப்புசிறுநீரககல்உருவாகும்அபாயத்தை அதிகரிக்கிறது.செறிவூட்டப்பட்டசிறுநீர்தாதுக்களின் படிகமயமாக்கலுக்கு வழிவகுக்கும் என்பதுடன் சிறுநீரக கற்களுக்கு பங்களிக்கிறது.

எனவே, பெண்கள் 200 மில்லி கண்ணாடி குவளையில் 8 குவளை தண்ணீரையும் ஆண்கள் அதேயளவில் 10 குவளை தண்ணீரையும் நாளொன்றுக்குக்கட்டாயம்அருந்தவேண்டும்என்று தேசியசுகாதாரசேவைமையம்பரிந்துரைத்துள்ளது. உடற்பயிற்சி, வானிலை மற்றும் சுகாதார நிலை போன்ற காரணிகளின் அடிப்படையில் இன்னும் அதிகமாகத் தண்ணீர் அருந்த வேண்டிய தேவை ஏற்படும்.

நீரிழப்பு ஏற்பட்டால் நாக்கு, வாய் போன்றவை வறண்டு காணப்படும், தாகம் அதிகமாக இருக்கும். சோர்வாக இருப்பீர்கள், தலைவலி , தலை சுற்றல் ஏற்படும், சிறுநீர் மிகவும் அடர் நிறத்திலும் இயல்பை விட குறைவாகவும் வெளியேறும், தசைகளில் வலி ஏற்படும், இதயத்துடிப்பு அதிகப்படியாக இருக்கும், குருதிஅழுத்தம்மிகவும்குறைந்துவிடும்எனவைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். வயதானவர்களுக்கு சர்க்கரை வியாதியும் இருந்து நீரிழப்பும் ஏற்பட்டால், பக்கவாதம் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம்.

எனவே நீரிழப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு இயலுமானவரை உணவுகளை வீட்டிலேயே சமைத்து உண்பது நல்லது. கரட், வெள்ளரி, வெங்காயம், தக்காளி, முட்டைக்கோஸ், பூசணி போன்ற காய்கறிகளை உணவுகளில் அதிகளவில்சேர்த்துகொள்வது நீரிழப்பு ஏற்படுவதை கட்டுப்படுத்தும்.

கார்பனேடட் குளிர்பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவற்றைதவிர்ப்பதும்சிறந்தது. அவற்றுக்குப் பதிலாக மோர், எலுமிச்சை சாறு, நெல்லிக்காய் சாறு, இளநீர், எலுமிச்சை கிரீன் டீ போன்றவற்றை பருகலாம்.

சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி இந்த வெப்ப காலத்தில் ஆரோக்கியத்தோடு வாழ முயற்சிப்போம்.




# தமிழ்மொழி வளர்ச்சியில் மின்தமிழ்!

ந.பவித்திரா

உலகம் முழுவதும் இன்று பல கோடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருவி இணையம்-தான். இணையம் வந்த பிறகுதான் தமிழ் சார்ந்த தகவல்கள் கடல் கடந்து உடனுக்குடன் செல்ல முடிந்தது. முப்பது வருடங்களுக்கு முன் இந்த வசதி இல்லை.

1995 ஒக்டோபரில் சிங்கப்புர் அதி-பர் ஓங் டாங்சாங் தொடங்கி வைத்த ‘ஜெர்னி வேர்ட்ஸ் ஹோம் அண்ட் நேசன் அந்தாலஜி ஓஃப் சிங்கப்பூர்’ என்கிற நான்கு தேசிய மொழி கவி தைகளுக்கான வலையகத்தில்தான் முதன் முதலில் தமிழ் இணையம் பதிவேற்றம் செய்யப்பட்டது.

‘இன்டார்நெட் ரிசார்ச் அண்ட் டெ-வலப்மெண்ட் யூனிட்’ குழுவில் பணி யாற்றிய கோவிந்தசாமி, முனைவர் டான்டின் வி லியோஸ், கோங்யாங் ஆகிய மூவரும்தான் முதல் தமிழ்ப் பக்கத்தை வலையேற்றினார்கள்.

இன்று மின்தமிழ் வளார்ச்சியில் தமிழ் மொழியை உள்ளீடு செய்வதற்கான பணிகள் பெருமளவில் வெற்றி பெற்றுள்ளன. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கத்தில் நீடித்திருந்த பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டு விட்டன.

இதனால் தமிழ் விக்கிபீடியா, வலைப்பூக்கள், இணையதளங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. இவை இன்றைய காலத்திற்கேற்ற தமிழ்ப் பணிகள். ஆனால் இவை அனைத்தும் கணினித் தமிழ் வளர்ச்சியின் முதல் கட்டம்தான்.

அடுத்த கட்டத்துக்கு நம் மொழியை அழைத்-துச் செல்ல வேண்டுமானால் நம் மொழியின் பயன்பாட்டை தகவல் தொழில்நுட்ப கருவிகளின் வழியில் அதிகரிக்க வேண்டும். இன்று எல்ல-ாருமே அலைபேசியைப் (மொபைல்) பயன்படு-த்துகிறார்கள். அதில் ஒருவரது பெயரைப் பதிந்து வைத்துக் கொள்ளும்போது ஆங்கிலத்தில் மட்டுமே பதிவு செய்யும் வசதி முன்பு இருந்தது. ஆனால் தற்பொழுது தமிழிலும் பெயார்களைப் பதிந்து வைக்கும் வசதி இருக்கிறது.

அது மட்டுமல்ல நம் கைப்பேசியை அருகே வைத்து, நாம் தமிழில் பேசினால் அதுவாகவே தட்டச்சு செய்து கொள்ளும் வசதியும் வந்துவிட்டது. இப்படி தமிழிலேயே உரையாடி தகவல் பரி மாற்றம் செய்து கொள்ளலாம். அது போன்ற தமிழ்ச் செயலிகளைத் தரவிறக்கம் செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரும்போது தகவல் தொழில்நுட்ப சா-தனங்களில் தமிழின் உபயோகமும் அதிகரிக்கும்.

இப்பொழுதெல்லாம் நாம் கணினி, மடிக்கணினி, அலைபேசி, திறன்பேசி என்று பல்வேறு தகவல் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். நம் சந்தேகங்களுக்குத் தீர்வு காண வாடிக்கையாளார் சேவை மையங்களைத் தொடர்பு கொள்கிறோம்.

அப்படி வாடிக்கையாளர் சேவை மையங்கள் நம்மைத் தொடர்பு கொள்ளும்போது, ‘நீங்கள் எந்த மொழியைத் தேர்ந்தெடுக்க விரும்புகி றீர்கள்’ என கேள்வி எழுப்புகிறார்கள். ஆங்கிலமாக இருந்தால் எண் ஒன்றை அழுத்தவும் என்றும் தமிழாக இருந்தால் எண் இரண்டை அழுத்தவும் என அது தொடரும்.



நமக்கு ஆங்கிலம் உட்பட வேறு மொழிகள் தெரிந்திருந்தாலும் தமிழிலேயே விருப்பம் என்பதை ஆணித்தரமாக பதிவு செய்வதன் மூலம் தமிழ் பேசும் ஒருவருக்கு அங்கு பணி புரியும் வாய்ப்புக் கிட்டும். மேலும் பலருக்கு புதிய பணி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

தமிழைப் பயன்படுத்த ஆட்களே இல்லை என்னும் நிலை ஏற்பட்டால் மெல்ல மெல்ல அனைத்துத் தளவாடங்களில் இருந்தும் தமிழ் வெளியே தள்ளப்படும். இதற்கு உதாரணமாக ஒரு நிகழ்வு. அண்மையில் ஒரு பெரிய நகைக்-கடைக்கு சென்று இருந்தேன். விடைபெறும்போது அவர்களின் வணிகம் பற்றியும் வாடிக்கையாளர் சேவை பற்றியும் கருத்து அளிக்கச் சொல்லி ஒரு படிவத்தை நீட்டினர். அது முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே இருந்தது. ‘தமிழில் படிவம் இல்லையா’ என நான் கேட்டபோது, ‘தமிழ்ப் படிவம் இருந்தபோது பெரும்பாலான வாடிக்கை-கயாளர்கள் ஆங்கிலத்திலேயே தங்கள் கருத்தை எழுதினார்கள். அதனால் எங்கள் நிறுவனம் ஆங்கிலத்திலேயே படிவங்களை அச்சடிக்க முடிவு செய்துவிட்டது’ என்றனர்.

தானியங்கி பணம் எடுக்கும் இயந்திரத்தில் ஆங்கிலம், தமிழ் எதில் தொடர விருப்பம் எனும் கேள்வி வருகிறது. நாம் தமிழையே தேர்வு செய்யவேண்டும். நமக்கு ஆங்கிலம் நன்கு தெரிந்திருந்தாலும், நம் மொழியின் பயன்பாட்டை அதிகரிக்கும் இது போன்ற செயல்களை நாம் முனைந்து செயலாற்ற வேண்டும்.

அவ்வளவு ஏன், வங்கி காசோலைகளை நாம் தமிழிலேயே நிரப்பலாம். யாரும் நம்மை கேள்வி கேட்க முடியாது.

(5ஆம் பக்கம் பார்க்க..)

# தமிழ்மொழி வளர்ச்சியில்..........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழைப் பயன்படுத்த சிலர் வெட்கம் கொள்கின்றனர். நம் மொழியைப் பயன்படுத்த நமக்கு எந்த வெட்கமும் தேவையில்லை. நாம் அடுத்த தலைமுறைக்கு மொழியை உயிர்ப்புடன் கொண்டு செல்கிறோம் என்ற பெருமை எப்பொழுதும் வேண்டும்.

வீட்டிற்கு ஒரு பதிவுத் தபால் வந்தால்கூட அதில் ஆங்கிலத்தில் கையொப்பம் இடுகின்றனர். ஆங்கில மொழி போதை சிலருக்கு இருக்கிறது. அதிலிருந்து அவர்கள் முதலில் வெளியே வர வேண்டும். நாம் மட்டுமல்ல நம் பிள்ளைகளைக் கூட தமிழில் கையொபமிடப் பழக்க வேண்டும். ஒருவர் எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். ஆனால் தாய் மொழியின் மீது பற்று கொள்ளாமல் இருக்கலாமா?

ஒரு மொழியின் பாதுகாப்பு அதன் பயன்பாட்டில்தான் உள்ளது. அதாவது, தமிழர்களாகிய நம் ஒவ்வொருவரின் கைகளிலும் உள்ளது. நம் தமிழ் நம் பெருமை என்பது மட்டுமல்ல அது நம் உரிமையும்கூட. நம் உரிமையை பயன்படுத்த மறுக்கும்போது, நாம் பல உயர்வுகளை இழக்கிறோம். ஒரு மொழி, காலத்திற்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொண்டால் மட்டுமே அது சமூகத்தில் நிலையான இடத்தைப் பெற முடியும்.

நம் மொழி உயிர்ப்பாக இருந்தால்தான் நமக்கான முக்கியத்துவம் பெருகும். இதை தமிழர்களாகிய நம்மில் பலர் உணர்வதே இல்லை. வேற்று மொழி பேசும் இருவர் தமிழ் மண்ணில் சந்தித்துக் கொண்டால் உடனே அவர்களின் தாய்மொழியில் உரையாடுகின்றனர். ஆனால், இரண்டு தமிழர்கள் அவரவர் சொந்த இடங்களைத் தாண்டிச் சந்தித்துக்கொண்டால்கூட தமிழில் பேசுவதில்லை. ஆங்கிலத்திலோ அல்லது அந்த மாநில மொழியிலோ பேசிக்கொள்கிறார்கள்.

திறன் பேசியில் வேலை, கல்வி, குடும்பம், நட்பு என பல குழுக்களில் நாம் சங்கமிக்கிறோம். பிறந்தநாள், திருமண நாள் போன்ற அவரவருக்கான சிறப்பான நாட்களில் பிறந்தநாள் வாழ்த்துகள், திருமணநாள் வாழ்த்துகள் என்று தமிழில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கலாம். சமுதாயத்தில் உயர் பதவியிலும் பெரிய மதிப்பிலும் இருப்பவர்கள் முதலில் இதைப் பின்பற்ற வேண்டும். அப்பொழுதுதான் அவர்களைப் பார்த்து சாமானியர்களும் அதன் வழி நடப்பர். அது மட்டுமல்ல,





இணையவழியில் பொருட்களை வாங்குவதற்குக்கூட தமிழி லேயே உள்ளீடு செய்ய இன்று வழிவகை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற சேவைகளைத் தமிழர்களைத் தாண்டி வேறு யாரும் பயன்படுத்தப் போவதில்லை. ஆக நமக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டிருக்கும் இதுபோன்ற சேவைகளை நாம் மிக அதிகமாகப் பயன்படுத்தினால்தான் தமிழ் நதி வற்றாது ஓடிக் கொண்டிருக்கும்.

ஆங்கிலத்தில் இருக்கும் பல இணையதள சேவைகள்கூட தமிழில் உடனடியாக மொழிபெயர்க்கப்பட்டு படிப்பதற்குக் கிடைக்கிறது. கைப்பேசியில்கூட இந்த வசதி மாறுபட்ட வகையில் மெருகேற்றப்பட்டுள்ளது. வேற்று மொழியில் உள்ள ஒரு தகவலை புகைப்படம் எடுத்து அதில் மொழிபெயர்ப்பு என்ற தடத்தை தேர்ந்தெடுத்து எந்த மொழியில் மொழிபெய்க்கப்பட வேண்டும் என்று தகவலை உள்ளீடும் செய்தால் அந்த மொழியில் அது மொழி பெயர்த்து நமக்குக் கொடுக்கிறது. மொழி புரியாத வெளிமாநிலங்களில் கூட நாம் பெயர்ப் பலகைகளை இவ்வாறு புகைப்படங்களாகப் பதிவேற்றி ஒரு நண்பரிடம் கேட்டுப் பெறுவதைப் போல கருவியிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழின் உயர்வு அதன் தொன்மையில் மட்டும் இல்லை, அதன் தொடர்ச்சியிலும் உள்ளது. இயல், இசை, நாடகம் என வளர்ந்த முத்தமிழ், கணினித் தமிழ் என்ற நான்காம் தமிழாக இன்று வளர்ந்துள்ளது. கணினித் தமிழின் நவீன கூறே மின்தமிழ் எனச் சொல்லலாம். கணினி வழியே இணையத்தின் பல்வேறு மின் உள்ளடக்கங்களை ஒவ்வொரு மொழியிலும் தொடர்ந்து உருவாக்கி வருகின்றனர். அவ்வகையில் தமிழிலும் பல்வேறு மின் உள்ளடக்கங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் சார்ந்த இணைய மென்பொருள் இன்று ஏராளமாக கிடைக்கிறது. இதனால் எண்ணற்ற மின் இதழ்கள் தோன்றியுள்ளன. மின் இதழ்கள் தம்முடைய வளர்ச்சியோடு தமிழ் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன. மின் இதழ்கள் செய்தித் தளங்களாகவும், பல்சுவைத் தளங்களாகவும், தகவல் தளங்களாகவும் விளங்குகின்றன. இவற்றையெல்லாம் தாண்டி அனைத்து மொழிகளுக்கும் முன்மாதிரியாக மிகப்பெரிய தமிழ் மின்நூலகத்தை உருவாக்க வேண்டும் என்பது பலரது கனவு. இதனால் அறிவுச்செல்வங்கள் அனைத்தும் அவரவர் வீடு தேடிச் சென்றடையும். தமிழ் மொழிக்கும் உலக மொழி என்ற பெருமை கிடைக்கும்.

செயற்கை நுண்ணறிவின் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இக்காலத்தில் மின்தமிழை விருப்பத்துடன் கையாளும்போது நம் தமிழ் மொழி காலத்தைக் கடந்து வாழும் என்பதில் ஐயமில்லை.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

தொடர்புகளுக்கு: 0777 43 5557

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வவுனியா – பாவற்குளத்தின் கீழான 200 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு





குளத்தில் நீர் இருந்தும் விநியோகிக்காததால் விவசாயிகள் பரிதாபம் வவுனியா, பாவற்குளத்தின் கீழான பகுதியில் செய்கை பண்ணப்படும் 200 ஏக்கர் வரையிலான நெற் செய்கை நீர் விநியோகிக்காததால் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாவற்குளத்தின் கீழ் கால போக நெற் செய்கை குளத்து நீர்பாசனத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. தற்போது பலர் அதனை அறுவடை செய்து வரும் நிலையில் சீரற்ற காலநிலையால் மழை தாக்கம் காரணமாக சில விவசாயிகளின் பயிர்கள் பாதிப்படைந்த நிலையில் மீள விதைத்திருந்தனர்.

இவ்வாறு மீள மற்றும் தாமதமாக விதைக்கப்பட்ட சுமார் 200 ஏக்கர் நெற் செய்கையில் தற்போது கதிர் நிலைக்கு வரவுள்ள பயிர்களுக்கு நீர் தேவையாகவுள்ளது.

ஆனால், பாவற்குளத்தின் நீரை சிறுபோகத்திற்குத் தேவை எனக் கூறி திறக்க மறுப்பதால் தற்போது 200 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பயிற் செய்கை நிலங்கள் அறுவடைக்கு இரண்டு - மூன்று வாரங்கள் உள்ள நிலையில் பயிர்கள் வெப்பம் காரணமாக பாதிப்படைந்துள்ளன. போதிய கதிர் தாக்கம் இல்லாது பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக, பொருளாதார நெருக்கடிக்குக்கு மத்தியில் பயிற் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் அறுவடை நிலைக்கு வரவுள்ள பயிர்கள் கண் முன்னே அழிவதைக் கண்டு கண்ணீர் விடுவதுடன், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

(05-100)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## 2 நாட்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கிபயணித்தஇரவுநேரஅஞ்சல் தொடருந்துடனேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த மற்றுமொரு விபத்தில் வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி உயிரிழந்தார். இச்சம்பவத்தில்உரும்பிராய்வடக்கு பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி அருமைநாயகம் (வயது 80) உயிரிழந்தார்.

வீட்டிற்கு அருகில் உள்ள பகுதியில்குப்பையைக்கொட்டிவிட்டு வீட்டுக்கு வருவதற்காக வீதியைக் கடக்க முற்பட்டபோது, பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

## ‘கண்ணீரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினால் கொழும்பு கங்காராமயவிற்கு வழங்கப்பட்ட 200,000 அமெரிக்க டொலர்கள் நாடளாவிய ரீதியிலுள்ள 1,800 பௌத்த விகாரைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## தேயிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெப்பமான காலநிலை நிலவுகிறது. இதனால் நீர் ஊற்றுகள் இல்லாமல் போகிறது. இந்த நிலைமையை கருத்தில்கொண்டுஒரேநாளில்முழு வயலிலும்நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறு விவசாய சமூகத்திடம் கேட்டுகொள்கிறோம்.

விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். நாற்று நடுதலுக்காக ’பரசூட்’ முறைமையை பயன்படுத்த வேண்டும். அது குறித்த பொறுப்பு விவசாய துறையினரை சார்ந்துள்ளது. வயல் உழுவதற்காக, ’வட்டு கலப்பை’ மற்றும் ’மில் போட் கலப்பை’ ஆகிவற்றை பயன்படுத்துமாறு கோருகிறோம். தற்போது வெற்றிகரமாக விவசாயம் செய்து வரும்விவசாயிகள்தங்கள்அறுவடை இலக்குகளை அடைந்துகொள்ள மேற்படி முறைமைகளை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கிடைக்கும் நீரின் அளவு குறைந்துள்ளதால், மேலதிக பயிர் உற்பத்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சோளம், பயறு போன்ற தானிய விளைச்சலில் ஈடுபடுபவர்களுக்கு உதவ தயாராக உள்ளோம்.

தேயிலைக்குபயன்படுத்தப்படும் உரங்களின் விலை கடந்த காலங்களில்பெருமளவில்அதிகரித்திருந்தது. ஆனால், அந்த விலையை எம்மால் ஓரளவு குறைக்க முடிந்தது. தற்போது மேலும் விலையை குறைக்க எதிர்பார்க்கிறோம். அரசுக்கு சொந்தமான கொமர்ஷல், சிலோன் உரத் தொழிற்சாலைகளில் மேற்படி உர வகைகளை உற்பத்திச் செய்ய எதிர்பார்த்திருக்கிறோம்.

அரசுக்குச் சொந்தமான இரண்டு உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர தேயிலை உரத்தை தேயிலை தொழில்துறையினருக்கு சந்தை விலையை விடவும் குறைவாக வழங்குவதே எமது நோக்கமாகும்.

அதன்படி குறைந்தபட்சம் 2000 ரூபாய் என்ற குறைந்த விலையில் இந்த உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். அரசின் வேலைத்திட்டங்களுக்கமைய மானிய விலையில் உரத்தை வழங்கும்போது தேயிலை உற்பத்தியைமேம்படுத்தமுடியுமென கருதுகிறேன். மேலும்,தேயிலை தொழில்துறையிலும் புதிய தொழில்நுட்பத்தைபுகுத்தஎதிர்பார்க்கிறோம்.

அதிக பிரதிபலன்களை பெறுவதற்கான 59 திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 55திட்டங்கள்மிகவும்வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகிறது. ஒரு ஏக்கரில் மாதாந்தம் 1350 கிலோ தேயிலை கிடைக்கிறது.குறித்த திட்டத்திற்காக இவ்வருடத்திலும் 1000 மில்லியன் ரூபாவை செலவிட எதிர்பார்க்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தூரநோக்கிலேயே விவசாயத்தைமேம்படுத்துவதற்கான இவ்வாறானதிட்டங்கள்சாத்தியமாக செயற்படுத்தப்படுகின்றன. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு விவசாய அமைச்சுடன் இணைக்கப்படாவிட்டால் இந்த வேலைத்திட்டங்களை செய்திருக்க முடியாது. எனவே சரியான தீர்மானங்களை மேற்கொண்டமைக்காக ஜனாதிபதிக்குநாம்நன்றிகூறவேண்டும்.

உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசியபசிபிக் மாநாட்டுக்கு இணையாக ’யுபசஷ் வநஉஜ-24 யுபசஷ்உரடவரசயட வுநஉஜழெடழபல ஏளைழைஜ’ விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் கண்காட்சி நாளை (02) ஹம்பாந்தோட்டை விவசாய தொழில்நுட்ப பூங்காவில் ஆரம்பமாகவுள்ளதோடு, மார்ச் 02, 03, 04, 05 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்றார்.

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

திருகோணமலை சீனக்குடா விமானப்படை தளத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை விமானப்படை கெடட் அதிகாரிகளுக்கு அதிகாரவாணை அளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகார ஆணை பெறும் 58 அதிகாரிகளுக்கும் இன்று முக்கிய தினமாகும். உங்களை வளர்த்த பெற்றோரை மறக்கக்கூடாது. உங்கள்வாழ்க்கையைவடிவமைக்க பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்களை அர்ப்பணித்துள்ளனர். அவர்கள்அனைவருக்கும்நன்றிகூற வேண்டும். விமானப்படை அதிகாரிகள் என்ற வகையில் முக்கியமான பணியை மேற்கொள்கிறீர்கள். மேலும், நாட்டின் அரசியலமைப்பை பாதுகாக்கும் பொறுப்பும், உங்களுக்குக்கீழ் உள்ளவர்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பும் உங்களுக்கு கிடைக்கிறது.

நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாப்பதில் நீங்கள் உறுதியாக இருக்கவேண்டும்.அதைஒருபோதும் மறக்கக்கூடாது. அந்தக் கடமையை நீங்கள் நிறைவேற்றினால்தான் இலங்கையின் ஸ்திரத்தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும். எனவே, இதனை ஒரு முதன்மைப் பணியாக கருதிச் செயற்படுங்கள்.

மேலும் உங்களுடன் பணிபுரிவோர் மற்றும் உங்கள் தலைமைத்துவத்தின் கீழ் இருக்கின்ற அனைவருக்கும் மதிப்பளிக்க வேண்டும். அவர்களை வழிநடத்த வேண்டும். எப்போதும் முன்மாதிரியாக இருங்கள். உங்கள் கீழ் இருப்பவர்கள் உங்களிடம் பணிவுடன் நடக்க வேண்டுமெனில் உங்கள் சிரேஷ்டர்களுக்கு நீங்கள் மதிப்பளிக்க வேண்டும். அதனாலேயே உண்மையான ஒழுக்கத்தை கட்டியெழுப்ப முடியும்.

ஒருஅதிகாரியாகநீங்கள்உங்கள் அனைத்து பொறுப்புகளையும் நிறைவேற்ற வேண்டும். தலைமைத்துவத்தை வழங்க பின்நிற்கவேண்டாம். பிரச்சினைகள் வரும்போது விலகிச் செல்லாதீர்கள். குடியரசின் பொறுப்பு உங்களை சார்ந்துள்ளது. அந்த பொறுப்பை அச்சமின்றி நிறைவேற்றுவது உங்கள் கடமையாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு விரோதிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களை சார்ந்திருக்கிறது. இன்று நமது நாட்டின் பொருளாதாரம், சமூக கட்டமைப்பு, அரசியல் முறைமை சரிவிலிருந்து மீண்டு வருகின்றன. கடந்த காலத்திற்கு மீண்டும் செல்ல முடியாது. எனவே நாம் இங்கிருந்து முன்னேற வேண்டும். அதற்கு, நாட்டில் மிகப்பெரிய அளவில் நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

துரிதமாக பொருளாதார மாற்றத்திற்கு செல்ல வேண்டும். வளர்ச்சியடையாத நாடாக நாம் தொடர்ந்தும்இருக்கமுடியாது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றும்போது அதன் பலன்கள் உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் கிடைக்கும்.

எனவே, நாட்டின் அனைத்து தருணங்களிலும் நாட்டின் சட்டத்தை பாதுகாப்பதன் மூலம் அரசியலமைப்பின் பிரகாரம் ஸ்திரத்தன்மையைப் தக்க வைத்துகொள்வதற்காக நீங்கள் உங்களைஅர்ப்பணிக்கவேண்டும். அப்போதுதான்நாட்டில்வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். மேலும் எமது நாட்டை எதிரிகளின் அச்சுறுத்தல்களிலிருந்துபாதுகாப்பது மட்டுமன்றி, இன்றைய சர்வதேச அரசியல் சூழலுக்கு ஏற்ப பிராந்திய பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

பிராந்தியத்தின் அமைதிக்கும், ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்பட்டால் அது எமது நாட்டுக்கும் ஆபத்தானதாகும். நாம் தனியொரு நாடாக மட்டும் வாழ முடியாது. ஒவ்வொருநாட்டுடனும்கைகோர்த்து முன்னேற வேண்டும். இலங்கை போன்றபோர் அனுபவம் மிக்க நாடு ஒதுங்கி நிற்பதானது கடமைகளை துறந்துச் செயற்படுவதாகிவிடும். பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு மிக முக்கியமானது. அதேபோல் உலக அமைதியும்முக்கியமானது. எனவே, இவ்வாறான விடயங்களுக்கு எமது ஒத்துழைப்பு அவசியப்படும் போது ஒரு நாடு என்ற வகையில் முப்படையினரின் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எமது படையினர் மாலி இராச்சியத்தை பயங்கரவாதத்திலிருந்து மீட்க உதவியது. அது பாராட்டப்படவேண்டியதாகும். இன்று செங்கடலில் நமது பொருளாதார உரிமைகள் பாதிக்கப்படுமானால் அவற்றைப்பாதுகாப்பதில்உறுதியாக இருக்க வேண்டும். எனவே, பிராந்தியம் மற்றும் உலக அமைதிக்குசவால்கள்விடுக்கப்படும் வேளைகளிலும் ஐக்கிய நாடுகள் சபைக்கு தேவையான ஆதரவை வழங்குவோம். எனவே, உலக அமைதியும்ஸ்திரத்தன்மையையும் போன்றேநமதுநாட்டின்அமைதியும் ஸ்திரத்தன்மையும் பாதுகாக்க வேண்டும்.

முப்படையகளும் அடுத்த தசாப்தத்தில் பெருமளவான மாற்றங்களைசந்திக்கும். இன்றைய உலகம் தொழில்நுட்ப யுகத்தில் உள்ளது. இராணுவங்கள் தொழில்நுட்பத்தைமையப்படுத்தியே செயல்படுகின்றன. நாமும் படிப்படியாக அந்த நிலையை எட்ட வேண்டும். உங்களுக்கு அதற்கான பொறுப்பு உள்ளது. இந்த அனைத்து விடயங்களுடனும் நீங்கள் வலுவான இராணுவமாக உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன் என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir



# பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு முஸ்லீம் எய்ட் ஸ்ரீலங்கா தொழில் ஊக்குவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு அவர்களின் திறன்கள், அறிவு மற்றும் சாத்தியமான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வருமானத்தை வழங்குவதற்காக கிண்ணியா சூரங்கல் கிராமத்தில் சூரா உற்பத்திகள் எனும் மா மற்றும் மஷாலா தூள் உப்பத்தி எனும் நிலையம் கிண்ணியா பிரதேச செயலாளர் .எம். எச்.கனி அவர்களால் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது .

இந் நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர், முஸ்லீம் எய்ட் நிகழ்ச்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் . முஸ்லீம் எய்ட் திட்ட உத்திேயாகத்தர் மற்றும் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம், முஸ்லீம் எய்ட் அமைப்பின் பொருளாதார மேம்பாட்டு உதவி திட்டத்தில் இந்த நிலையம் ஆரம்பித்தது ஒரு சிறப்பம்ச முக்கியத்துவத்தைச் சேர்த்தது. இது அவர்களின் தன்னம்பிக்கையை வலுவடைய செய்யும் .

இங்கு கருத்து தெரிவித்த கிண்ணியா பிரதேச செயலாளர் -

இவ்வாறான முயற்சிகளின் முக்கியத்துவத்தையும், தமது பொருளாதார அபிவிருத்திக்கான அதிகபச நன்மைகளை பெறுவதற்கு பயனாளிகள் எவ்வாறு இச்செயற்திட்டத்தில் பங்களித்து செயலூக்கத்துடன் பங்குகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முஸ்லீம் எய்ட் ஸ்ரீலங்கா திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர்களுக்கு அவர்களின் திறன்கள், அறிவு மற்றும் சாத்தியமான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் நிலையான வருமானத்தை வழங்குவதற்காக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. (05)

# சிறுவர் கழகங்களை மேம்படுத்த பாடசாலைக்குக் 'கரம்போர்ட்'

(எம். எப். றிபாஸ்)

சிறுவர் கழகங்களை மேம்படுத்தும் நோக்கில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தால் பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலயத்துக்கு கரம்போட் வழங்கி வைக்கப்பட்டது.

பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். எஸ்.எச்.சியாத் ஆகியோர் இணைந்து பாடசாலை மாணவர்களிடம் வழங்கி வைத்தனர். பிரதி அதிபர் உட்பட ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (05)

# கிழக்கு ஆளுநர் கள வருகை

(ஹஸ்பர் ஏ.எச்)

திருக்கோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி தொடக்க பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு கடந்த புதன்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் களப்பயணம் மேற்கொண்டு அந்த நிலைவரங்களைப் பார்வையிட்டார்.

அப்பொழுது திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயளாலர் பொன்னம்பலம் தனேஷ்வரன், திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் இராசசேகர், பாடசாலை முதல்வர் திருமதி லிங்கேஸ்வரி ரகுராஜன், துணை முதல்வர், ஆசிரியர் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள் கலந்துகொண்டனர்.

மேலும் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு முன்பு அந்தப்பகுதி முழுமையாக தூய்மை செய்து முடிப்பதாக தீர்மானிக்கப்பட்டு பணிகள் விரைவு படுத்தப்பட்டன. (05)

# வவுனியா புதூர் பகுதியில் ரயில் மோதி பெண் சாவு

வவுனியா, புளியங்குளம், புதூர் பகுதியில் ரயில் கடவையை கடக்க முற்பட்ட பெண் மீது ரயில் மோதியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

வியாழக்கிழமை மாலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற ரயில் புதூர் பகுதியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து, மரணமடைந்த பெண்ணின் சடலம் மாங்குளம் ரயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப் பட்டதுடன், அங்கிருந்து மாங்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் 45 தொடக்கம் 55 வயது மதிக்த்தக்க பெண்ணே மரணமடைந்வராவார். மரணமடைந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. புளியங்குளம் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05 - 100)



# சம்மாந்துறையில் மு.கா. கிளை சீரமைப்பு

(தில்சாத் பர்வீஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறை 04 ஆம் கிராம சேவகர் பிரிவுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளை புணரமைப்பு கூட்டம் சம்மாந்துறையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும்,முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன்,அரசியல் அதி உயர் பீட உறுப்பினர் ஏ.எம்.ஏ.அஸீஸ், சம்மாந்துறை மத்திய குழு செயலாளர் எம்.ஜே.எம். அஸாறுடீன், தைக்காப்பள்ளி வட்டார வேட்பாளர் அர்ஸாத் இஸ்மாயில் , சின்னப்பள்ளி வட்டார வேட்பாளர் நிப்றாஸ் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர். (05)



# அம்பாறை மாவட்டச் செயலக கணக்காளராக ஐ.எம் பாரீஸ்

(சர்ஜ/ன் லாபீர்)

அம்பாறை மாவட்ட செயலாளரின் உள்ளக இடம்மாற்றத்திற்கிணங்க நிந்தவூரை பிறப பிடமாகவும், சம்மாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை கணக்காளர் சேவை தரம் 0 1ஐ சேர்ந்த எஸ்.எல் ஐ.எம் பாரீஸ் கடந்த புதன் கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் புதிய கணக்காளராக கடமைகளை பொறுப்பேற்றார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபயேவிக்ரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா,அம்பறை பிரதம கணக்காளர் ஏ.எம் ஆதம்பாவா,சம்மாந்துறை பிரதேச செயலக கணக்காளர் எஸ்.எல் சர்தார் மிர்ஸா,சம்மாந்துறை பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் ஏ.கே.ரினோஸா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவர் கல்முனை,அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை,சம்மாந்துறை பிரதேச செயலகம் போன்ற இடங்களில் கணக்காளராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# வவுனியா புதூர் பகுதியில் ரயில் மோதி பெண் சாவு



வவுனியா, புளியங்குளம், புதூர் பகுதியில் ரயில் கடவையை கடக்க முற்பட்ட பெண் மீது ரயில் மோதியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

வியாழக்கிழமை மாலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற ரயில் புதூர் பகுதியில் உள்ள ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போது மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

இதனையடுத்து, மரணமடைந்த பெண்ணின் சடலம் மாங்குளம் ரயில் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு ஒப்படைக்கப்பட்டதுடன், அங்கிருந்து மாங்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் 45 தொடக்கம் 55 வயது மதிக்கத்தக்க பெண்ணே மரணமடைந்வராவார். மரணமடைந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. புளியங்குளம் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05 - 100)

# சமூகவியல் விஞ்ஞான போட்டியில் மஜீட்புர மாணவிக்கு மூன்றாமிடம்

(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறைக கோட்டக் கல்வி அலுவலகத்திற்குப்பட்ட மஜீட்புரம் வித்தியாலயத்தில் உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் செல்வி கே.நம்.எப் அஸீமா அகில இலங்கை ரீதியில் சமூகவியல் விஞ்ஞான போட்டியில் மூன்றாம் இடம்பெற்றுள்ளார்,

இம்மாணவிக்கு ஊக்கமளித்து பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களுக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்விசார் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு சம்மாந்துறை கல்விச் சமூகம் உளமார வாழ்த்துகின்றது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# சம்பள நிர்ணய சபையின் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் அமைச்சர் சந்திப்பு

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மூன்று ஆண்டு காலப்பகுதிக்கு தேயிலை, இறப்பர் ஆகியவற்றுக்கான தொழிலாளர்கள் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளுடனான சந்திப்பு கடந்த புதன்கிழமை இ.தொ.கா. தலைமையகமான சௌமிய பவனில் இ.தொ.கா. பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பிலும், சம்பள நிர்ணய சபையில் எமது கோரிக்கைகளை எவ்வாறு முன்வைக்கப்படல் வேண்டும் என்பதையும் இந்தச் சந்திப்பின் போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இ.தொ.கா. சார்பில் தேயிலை உற்பத்திக்கான சம்பள சபையின் அங்கத்தவரும், சட்டத்தரணியுமான கா.மாரிமுத்து, இறப்பர் பயிரிடல் பதனிடல் சம்பள சபைக்கான அங்கத்தவரும் உபதலைவருமான எஸ்.இராஜமணி, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அதன் நிர்வாகச் செயலாளர் எஸ்.பி விஜயகுமார், ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பி.ஜி.சந்திரசேன, செங்கோடி சங்கத்தின் சார்பில் திருமதி வி.ராஜலக்சுமி, ஸ்ரீலங்கா பொதுஜன தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சிறிமான ஹெட்டிகே சாந்த, ஜே.எஸ்.எஸ். சங்கத்தின் சார்பில் ஜே.ஏ.டி. நிஸாந்த புஸ்பகுமார ஆகியோர் இதில் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)




## சங்கானை வைத்தியசாலை ஊடாக இனிமேல் பஸ் சேவை

*பொதுமக்கள் நன்மை கருதியும் சங்கானை வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாகவும்*

*யாழ்ப்பாணம் – கீரிமலை (788) வழித்தட பஸ்கள் கீரிமலையிலிருந்து புறப்படும் நேரங்களை காலை 07.20, 08.05 பி.ப 01.15 ஆகிய நேரங்களிலும் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் நேரம் காலை*

*09.53, 11.25, பி.ப 03.15 ஆகிய நேரங்களிலும் சேவையாற்றும் பஸ்கள் நேற்று முதலாம் திகதியிலிருந்து சங்கானை பிரதேச வைத்தியசாலையூடாக சேவையாற்ற உள்ளது.*

*கீரிமலையிலிருந்து புறப்படும் பஸ்கள் பண்டதரிப்பு சந்தி, கலைமகள் பாடசாலை, பிரான்பற்று ஊடாக சங்கானை பிரேதச வைத்தியசாலையை அடைந்து அவ்வழியே தொட்டிலடி சந்தி ஊடாக யாழ்ப்பாணம் அடைதல் வேண்டும்.*

*அவ்வாறே யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் பஸ்கள் தொட்டிலடி சந்தியூடாக சங்கானை பிரதேச வைத்தியசாலையை அடைந்து பிரான்பாற்று ஊடாக கலைமகள் பாடசாலை அடைந்து கீரிமலைக்கு செல்லுதல் வேண்டும்.*

*மேலும் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பஸ்ஸில் பயணித்த பிரயாணி ஒருவர் பஸ்ஸில் இருந்து இறங்கும்போது வீழ்ந்து மரணம் சம்பவித்தமை தொடர்பாக உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.*

*அதே வேளை யாழ்ப்பாணம் பருத்தித்துறை பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர் வீழ்ந்து மரணம் சம்பவித்தமை தொடர்பாகவும்*

*விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளது. இந்த இரு விசாரணைகளும் முடிவுறுத்தப்படும் வரை மேற்படி பஸ்களின்*

*வழியனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.*

*இனிவரும் காலங்களில் இவ்வாறான பாரதுாரமான குற்றங்களுக்கு எதிராக உரிமையாளர்களின் வழிஅனுமதிப்பத்திரம்*

*தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென பஸ் உரிமையாளர்களுக்கு*

*தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களினூடாக எச்சரிக்கப்பட்டுள்ளது.*

*யாழ்.மாவட்டதில் உள்ளூர் சேவைகளின் வழியனுமதிப்பத்திரங்களில் பஸ் மாற்றம் செய்யப்படும் போது, புதிதாக பதிவு செய்யப்படும் பஸ் வடமாகாணத்திற்கு வெளியே கொள்வனவு செய்யப்பட்டு பதிவதாயின் 5 அடியை விட மேலதிகமான உயரத்தைக் கொண்ட பஸ்களை மட்டுமே பதிவு செய்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

*இதன் மூலம் தற்போது உள்ளூர் பஸ் சேவைகளில் பயணிகள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறைக்கப்படும். (05)*

# சமூக பாதுகாப்புச் சபை வளர்ச்சிக்கு மீன்பிடித்துறை அமைச்சரே காரணம்

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதீபன் புகழாரம்

யாழ். மாவட்டத்தில் சமூகபாதுகாப்பு சபையின் வளர்ச்சிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே காரணம் என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் புகழாரம் சூட்டினார்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இலங்கை சமூக பாதுகாப்பு சபையால் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2006 ஆம் ஆண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சமூக சேவைகள் அமைச்சராக இருந்தபோது முதன் முத லாக யாழ். மாவட்டத்தில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் செயற்பாடுகளை ஆரம்பித்தார். அவரின் உத்வேகமான செயற்பாடும் அதிகாரிகளின் அர்ப்பணிப்பும் குறித்த செயற்திட்டத்தை எமது மாவட்டத்தில் திறம்பட செயற்படுத்த உதவியது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 22 பேர் பயன்பெற்று வரும் நிலையில் கடந்த 10 வருடங்களாக சமூக பாதுகாப்பு சபையின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முதலிடத்தை பெற்றுவருகிறது.

மேற்படி திட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கு பல நன்மைகள் கிடைத்து வரும் நிலையில் மாணவர்கள் குறித்த திட்டத்தை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் பதினைந்து பிரதேச செயலகங்களிலும் செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் குறித்த திட்டத்தை தொடர்ந்தும் வெற்றிகரமாக செயற்படுத்துவேம் என அவர் மேலும் தெரிவித்தார்.



இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் சுரேந்திரன் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்ற வாழ்வை கொண்டாடும் நிகழ்வு புத்தளத்தில்

(எம்.எச்.எம் சியாஜ்)

'நூறு கோடி மக்களின் எழுச்சி பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்' என்ற தொனிப்பொருளில் புத்தளம் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கையகம் மற்றும் மட்டக்களப்பு 'சங்கத்' பெண்ணிலைவாத நண்பிகள் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்த விசேட நிகழ்வொன்று அண்மையில் புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் இடம்பெற்றது.

'பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்' எனும் தொனிப்பொருளில் மாசி மாதம் 14 ஆம் திகதி கலைகளுக்கூடாக எழுச்சி கொள்வதன் மூலம் வருடாந்தம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, அக்கரைப்பற்று, ஹற்றன், அநுராதபுரம் மற்றும் புத்தளம் ஆகிய எட்டு மாவட்டங்களை உள்ளடக்கி குறித்த மாவட்டங்களில் பெண்ணிலைவாத அமைப்புக்கள், சமூக மாற்றச் செயற்பாட்டாளர்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக பணிபுரிகின்ற பெண்கள், கிராம மட்டங்களில் உள்ள பெண்கள் மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பாக பணிபுரிகின்ற பெண்களை ஒன்றிணைத்து இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

'அன்பினால் ஓர் உலகம் செய்வோம்', 'பெண்களையும் எந்த ஒரு மனிதரையும் வன்முறை செய்யாத மகன்களை, சகோதரர்களை, நண்பர்களை, துணைவர்களை உருவாக்குவோம்' 'அன்பாலும் நப்பாலும் இணைந்த வாழ்தலை உருவாக்குவோம்' 'பெண்களின் பாரம்பரிய அறிவைக் கொண்டாடுவோம்' 'பூமி மீதான வன்முறைகளை இல்லாதொழிப் போம்' எனும் ஐந்து தொனிப்பொருளில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு நிகழ்வுகள் வெகு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. (05)

# மர்ஹூம் நஜீப் ஏ மஜீத் குறித்து அனுதாபப் பிரேரணை நடத்துக

## இம்ரான் எம்.பி. கோரிக்கை

*(ஹஸ்பர் ஏ.எச்)*

*சில மாதங்களுக்கு முன்னர் காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சரும், கிழக்கு மாகாண முதலமைச்சருமான மர்ஹூம் நஜீப் ஏ மஜீத் தொடர்பான அனுதாபப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்து தருமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகஷூப் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.*

*மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அனுதாபப் பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது வழக்கம். எனினும், சில முன்னாள் உறுப்பினர்களுக்கான பிரேரணைகள் நீண்ட காலங்களுக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்தத் தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு நஜீப் ஏ மஜீத் தொடர்பான அனுதாப் பிரேரணையை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஏற்பாடு*



*செய்து தருமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (05)*

# இலவசக் கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கிவைப்பு



(சர்ஜ/ன் லாபீர்)

சம்மாந்துறை ஏஸ்டிஎச்ஏ அமைப்பால் வருடாந்தம் அமுல்படுத்தப்படும் 'வளமான எதிர்காலம்' திட்டத்தின் கீழ் இவ்வருடம் சம்மாந்துறை அல்-அக்ஷா வித்தியாலயத்தின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் ஏ.பி ஹிபதுல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் கலந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு விஷேட அதிதியாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தின் நிர்வாக பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ்.எம் சமீம் கலந்து சிறப்பித்தார்.

மேலும் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (05)

# அல் - ஹஸனாத் பாலர் பாடசாலை விடுகைவிழா









அல் - ஹஸனாத் பாலர் பாடசாலையின் விடுகைவிழா அல் ஹஸ்பான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி வலய இணைப்பாளர் ஜெளசிரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

அத்துடன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.டி .எம்.தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஆசிக், பைசல் மரைக்கார், றிபாஸ் நசீர் மற்றும் கட்சியின் முதளைப்பாளி அமைப்பாளர் தௌபீக், முபாரிஸ், இணைப்பாளர் மதீன், முன்பள்ளி ஆசிரியை ஜிப்ரியா, மௌலவி பஸால் சலபி, சாஹுல் ஹமீட், கவிக்குரல் மன்சூர் மற்றும் கவிஞர் முனவ்பர்கான் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். (05)

# சம்மாந்துறைப் பகுதிகளில் கூட்டமாக வரும் காட்டு யானைகள் அட்டகாசம்

## மக்கள் பெரும் அச்சத்தில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக பெரும் போக வேளாண்மை அறுவடை முடிந்த நிலையில் வயல் வெளிகளை நோக்கி கூட்டமாக பெரும் தொகையில் காட்டு யானைகள் வர ஆரம்பித்துள்ளன.

சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி வில்லுக்குளம் பகுதியிலுள்ள வயல் பிரதேசங்களில் புதன்கிழமை காலை முதல் நூற்றுக்கும் மேற்பட்ட காட்டு யானைகளின் நடமாட்டம் காணப்பட்டது.

இந்த யானைக்கூட்டம் ஊருக்குள் நுழைந்து விடுமோ என்ற அச்சத்தில் கூக்குரல் இட்டு அந்த யானைகளை காட்டுப் பக்கம் துரத்தி அனுப்புவதில் பிரதேச மக்கள் ஈடுபட்டன. (05)

# மட்டக்களப்பு விவசாய திணைக்கள அணியினர் வெற்றிவாகை சூடினர்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் சுற்று போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர் அணியினர் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று 2024 ஆம் ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தை தம்வசம் ஆக்கினர்.

மட்டக்களப்பு இந்து கல்லூரி மைதானத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்ற போட்டிக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் தலைமை தாங்கியதுடன். முற்று முழுதான ஏற்பாடுகளையும் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் செய்திருந்தனர்.

நான்கு அணிகள் பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டியில் தாம் சந்தித்த சகல போட்டிகளிலும் நீண்ட ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர் இறுதிப் போட்டியில் திருகோணமலை மாவட்ட விவசாய திணைக்கள அணியினருடன் பலப்பரீட்சை நடத்தினர்.

இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தீர்மானித்த சுகிரதராஜ் தலைமையிலான மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர் சிறப்பான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பின் வியூகங்கள் மூலம் 7 ஓவர்களுக்கு 46 ஓட்டங்களை மட்டுமே எதிரணிக்கு வழங்கினர். 47 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள அணியினர் 9 விக்கட்டுக்களால் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கினர். மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளரின் உயரிய வழி காட்டலுடன் கூடிய பயிற்சியே சகல வீரர்களும் எந்த குறையும் இன்றி இந்தப் போட்டியில் பிரகாசிப்பதற்கு காரணமென அணியின் தலைவர் கூறினார். (05)

# மதிப்பளிப்பு

( வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை தமிழ்ப் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளர் சண்முகம் சரவணமுத்து தனது 36 வருட கல்வி சேவையில் இருந்து வியாழக்கிழமை ஓய்வு பெற்றார்.

அவரது கல்விப் பணியைப் பாராட்டி கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் அவருக்கான கௌரவம் வழங்கப்பட்டது.

பாண்டிருப்பைச் சேர்ந்த சேர்ந்த சரவணமுத்து 1988 இல் நியமனம் பெற்று மத்திய முகாம் நாலாம் கொலனி வாணி வித்தியாலயத்தில் கற்பித்து பின்னர் அன்னமலை ஶ்ரீசக்தி வித்தியாலயம், நாலாம் கொலனி வாணி வித்தியாலயம் ஆகியவற்றில் அதிபராக இருந்து பின்னர் நாவிதன்வெளி கோட்ட கல்வி பணிப்பாளராக நான்கு வருடமும் இறுதியாக கல்முனை தமிழ் பிரிவு கோட்டக் கல்வி பணிப்பாளராக 5 வருடமும் கடமையாற்றி ஓய்வு பெற்றார் .

முதலாம் திகதி அவரது அறுபதாவது பிறந்த தினம் .

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 91॰92 அணியைச் சேர்ந்த இவரது புலன நண்பர்களின் ஒன்று கூடலும் இடம்பெற்றது. (05)

# வாடகைக் கார் கொள்ளை கொழும்பில் இருவர் கைது

வாடகை வாகன சேவை நிலையமொன்றில் இருந்து கார் ஒன்றை வாடகைக்கு எடுத்து கார் சாரதிக்கு மதுபானம் அருந்தக் கொடுத்து காரை கொள்ளையிட்டுச் சென்ற இருவர் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மத்தேகொடை மற்றும் கிரிவத்துடுவ பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர்.

கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர்கள் இருவரும் முல்லேரியா பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 5,911 மில்லிகிராம் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளை கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பாராட்டுவிழா

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்குமாகாண பொது சேவை ஆணை குழுவின் முன்னாள் செயலாளரும், இந்நாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கிழக்கின் மூத்த நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி.எம். கோபாலரெத்தினத்திற்கு பாராட்டு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றது .

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் ஏ. மன்சூர் தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது .

இரண்டு வருட காலம் பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக பணியாற்றிய கோபாலரெத்தினத்திற்கு அங்கு பொன்னாடை போர்த்தி பாராட்டு விழா இடம்பெற்றது.

அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள். (05)

## சட் உதவி குறித்து மூதூரில் விழிப்புணர்வு நிகழ்வுகள்



(எப்.முபாரக்)

மூதூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு சட்ட உதவி தொடர்பான விழிப் புணர்வு நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.பீ.எம். முபாறக் தலைமையில் நடைபெற்றது.

சட்ட உதவி ஆணைக்குழுவின் செயற்பாடுகள், நீதிமன்ற முறைகள் மற்றும் நுகர்வோர் சட்டங்கள் தொடர்பாக சட்டத்தரணிகளால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர், சட்டத்தரணிகள், நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேசசெயலக உத்தியோகத்தர்களும் பங்குபற்றிருந்தார்கள். (05)

## கிண்ணியா மத்திய கல்லூரிக்கு எம்.எஸ்.தௌபீக் எம்.பி. விஜயம்

அபிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



(எஸ். சினீஸ் கான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கடந்த புதன்கிழமை கிண்ணியா மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

இதன் போது, தௌபீக் எம்.பியின் கோரிக்கைக்கமைவாக அவசர திருத்தவேலைக்காக கல்வி யமைச்சால் ஒதுக்கிடு செய்யப்பட்ட மூன்று மில்லியன் ரூபாவுக்கான திருத்தப்பணிகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், பாடசாலையின் தேவைகளை நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்ததுடன், விரைவில் தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் வாக்குறுதியளித்ததார். இந்தக்கலந்துரையாடலில், அதிபர் நஜாத், பிரதி அதிபர் கியாஸ், தொழிநுட்ப உத்தியோகத்தர் ஹம்சாத் மற்றும் ஆசிரியர்களும் பிரசன்னமாகியிருந்தனர். (05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.03.2024இல் வெளியிடப்பெற்றது.